## ஒன்றிய அரசின் புதிய குற்றவியல் சட்டங்களில் மாநில அளவில் திருத்தங்கள் மேற்கொள்ள

# ஓய்வுபெற்ற நீதியரசர் சத்யநாராயணன் தலைமையில் ஒரு நபர் குழு அமைப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூலை 10-

**ஒன்றிய அரசின் புதிய குற்றவியல் சட்டங்களில், மாநில அளவில் திருத்தங்கள் மேற்கொள்ள ஓய்வுபெற்ற நீதியரசர் சத்யநாராயணன் தலைமையில் ஒருநபர் குழு அமைத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இந்திய தண்டனைச் சட்டம், இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சிகள் சட்டம் ஆகிய சட்டங்கள் நடைமுறையில் இருந்த வந்த நிலையில், ஒன்றிய அரசால் அவை "பாரதிய நியாய சன்ஹிதா, 2023", "பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023" மற்றும் "பாரதிய சாக்ஷியா சட்டம், 2023" என மாற்றப்பட்டு, 1-7-2024 முதல் இச்சட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (8.7.2024) தலைமைச் செயலகத்தில், புதிதாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள மூன்று புதிய குற்றவியல் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவருவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி. வில்சன், என்.ஆர். இளங்கோ, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா. காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், காவல்துறை கூடுதல் இயக்குநர் அபின் தினேஷ் மோதக், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், தலைமை குற்றவியல் அரசு வழக்கறிஞர் அசன் முகம்மது ஜின்னா, சட்டத்துறை செயலாளர் எஸ். ஜார்ஜ் அலெக்சாண்டர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள அவசரச் சட்டம்!**

அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக, சமஸ்கிருதத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, நாடாளுமன்றத்தில், முறையான விவாதங்கள் ஏதுமின்றியும், மாநிலங்களின் கருத்துக்களைக் கேட்காமலும், அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டுள்ள இச்சட்டங்களின் பல்வேறு பிரிவுகளை எதிர்த்து நாடெங்கும் எதிர்ப்புகளும், போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

நாடாளுமன்றத்தில் 146 உறுப்பினர்களை இடைநீக்கம் செய்துவிட்டு, மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளை அறிந்துகொள்ள விருப்பமில்லாமல், ஒன்றிய அரசு அவசர கோலத்தில் இச்சட்டங்களை நாடாளுமன்றத்தில் விவாதங்கள் ஏதுமின்றி, கடந்த 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவேற்றியது.

**புதிய சட்டங்களில் உள்ள பிரச்சினை குறித்து முதல்வர் கடிதம்!**

நாடு முழுவதும் உள்ள பெரும்பான்மையினரின் கருத்தினைப் பிரதிபலிக்கும் வகையில், இந்தப் புதிய சட்டங்களில் என்னென்ன பிரச்சினைகள் உள்ளன என்பதைத் தெளிவாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது 17-6-2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒன்றிய அரசின் இந்த புதிய சட்டத்தின் சில அடிப்படைப் பிரிவுகளில் தவறுகள் இருப்பதோடு, மாநில அரசுகளிடமிருந்து முழுமையாக கருத்துக்களைப் பெறாமல் இவை இயற்றப்பட்டுள்ளதாக தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்த முதலமைச்சர் அவர்கள், இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை ஒன்றிய அரசு ஒத்திவைக்க வேண்டும் என்றும், முறையாக அனைத்து மாநில அரசுகளின் கருத்துகளைப் பெற்ற பின்னரே இவ்விஷயத்தில் முடிவெடுக்க வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டிருந்தார்.

**மாநில அரசுக்குப் பரிந்துரைத்திட முதல்வர் தலைமையில் ஆலோசனை!**

இந்த நிலையில், தமிழ்நாடு அரசின் சார்பில் இப்புதிய சட்டங்களில் என்னென்ன சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (8-7-2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசின் தலைமை வழக்குரைஞர், தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், பொதுத்துறைச் செயலாளர், சட்டத்துறை செயலாளர், காவல்துறை இயக்குநர் மற்றும் அரசு குற்றவியல் வழக்குரைஞர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில், இந்தப் புதிய சட்டங்களில் மாநில அளவில் பெயர் மாற்றம் உட்பட என்னென்ன திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என்பதை ஆராய்ந்து, அரசுக்குப் பரிந்துரைத்திட, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.சத்யநாராயணன் அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழுவினை அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

**ஒருமாத காலத்தில் குழுவின் அறிக்கை!**

இக்குழு இந்தப் புதிய சட்டங்கள் குறித்து தெளிவாக ஆராய்ந்து, மாநில அளவில் வழக்கறிஞர்கள் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் ஆலோசித்து, மாநில அளவில் என்னென்ன திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்பது பற்றிய தனது அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு வழங்கும்.

---

## சந்தீப் ராய் ரத்தோர் அதிரடியாக இடமாற்றம்:

# சென்னை மாநகர போலீஸ் கமிஷனராக அருண் நியமனம்!

### கடமை தவறும் அதிகாரிகள் மீது கழக அரசு உடனுக்குடன் நடவடிக்கை!

சென்னை, ஜூலை 10-

சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். அவருக்குப் பதிலாக சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி.யாக இருந்த அருண் ஐ.பி.எஸ். நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய விவகாரத்தில் முதலில் 9 பேர் பலியான தகவல் வெளியான போதே கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் ஷ்ரவன் குமாரை தி.மு.க. அரசு துரிதமாக பணியிட மாற்றம் செய்தது. கலெக்டர் மட்டுமல்ல; கள்ளச்சாராயம் விற்பனையை தடுக்க தவறியதாக எஸ்.பி. சமய்சிங் மீனா அதிரடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். மதுவிலக்கு அமலாக்கப் பிரிவைச் சேர்ந்த காவல் துணை கண்காணிப்பாளர் தமிழ்ச் செல்வன், கள்ளக்குறிச்சி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் கவிதா, திருக்கோவிலூர் மதுவிலக்கு பிரிவு காவல் ஆய்வாளர்



பாண்டிச்செல்வி, உதவி காவல் ஆய்வாளர் பாரதி மற்றும் அப்பகுதி காவல் நிலைய ஆய்வாளர் ஆனந்தன், உதவி காவல் ஆய்வாளர் ஷிவசந்திரன், காவல் நிலைய எழுத்தர் பாஸ்கரன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மனோஜ் உள்ளிட்டவர்களும் கூண்டோடு சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

கள்ளச்சாராயம் குடித்து உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதை உறுதி செய்யும் வகையில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், எ.வ. வேலு ஆகியோர் உடனடியாக கள்ளக்குறிச்சிக்கு விரைந்தனர்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியை போல போலீஸ்காரர்களை பாதுகாக்காமல் உடனுக்குடன் அவர்களை சஸ்பெண்ட், இடமாற்றம் போன்ற உத்தரவுகளை தி.மு.க. அரசு செயல்படுத்துகிறது என்பது கொஞ்சம் ஆறுதல் அளிக்கும் விஷயம் தான். தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்த போது சம்மந்தப்பட்ட காவல் துறையினரை கூட இடமாற்றம், சஸ்பெண்ட் என முதல் கட்ட நடவடிக்கைகளைகூட எடப்பாடி பழனிசாமி அரசு எடுக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் குட்கா ஊழலில் தொடர்புடைய டி.ஜி.பி. ராஜேந்திரன், போலீஸ் கமிஷனர் ஜார்ஜ் போன்றவர்களை பாதுகாக்கும் பணியை தான் செய்தது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் சிறப்பு டி.ஜி.பியாக இருந்த ராஜேஷ் தாஸ், அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி, டெல்டா மாவட்டத்துக்கு சுற்றுப் பயணம் செய்தபோது அவரின் பாதுகாப்பு பணிக்காக போன போது டெல்டா மாவட்டத்தில் பணியாற்றிய பெண் எஸ்.பி. ஒருவருக்கு பாலியல் தொல்லைக் கொடுத்ததாக ராஜேஷ் தாஸ் மீது குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால், அவரை உடனடியாக அ.தி.மு.க. அரசு சஸ்பெண்ட் கூட செய்யாமல் அவரை பாதுகாத்தது.

கலைஞர் அவர்கள் ஜெயலலிதா ஆட்சியில் நள்ளிரவில் கைது செய்யப்பட்ட விவகாரம் இந்தியா முழுவதும் அதிர்வலைகளை உண்டாக்கியது. அந்த கைதில் தொடர்புடைய போலீஸ் அதிகாரிகள் கிறிஸ்டோபர் நெல்சன், கே. முத்துக்கருப்பன், எஸ்.ஜார்ஜ் ஆகியோரை ஒன்றிய அரசு பணிக்கு மாற்ற அன்றைய வாஜ்பாய் தலைமையிலான அரசு உத்தரவிட்டது. ஆனால், அந்த உத்தரவைக் கூட மதிக்காமல் போலீஸ் அதிகாரிகளை பாதுகாத்தவர் தான் ஜெயலலிதா. இன்னும் சொல்லப்போனால் கலைஞர் கைது விவகாரத்தில் தொடர்புடைய கிறிஸ்டோபர் நெல்சனுக்கு தகவல் ஆணையர் பதவி எல்லாம் கொடுத்து கவுரவித்தார்கள்.

இப்படியெல்லாம் போலீஸ் அதிகாரிகளை பாதுகாக்காமல் கடமை தவறிய போலீஸ் அதிகாரிகளை உடனுக்குடன் நடவடிக்கைகளை எடுக்கிறது தி.மு.க. அரசு.



மன்னார்குடி அருகே ஈச்சங்கோட்டையில் கோத்ரேஜ் நிறுவனத்தின் சார்பாக பாமாயில் பழகுலை கொள்முதல் நிலையத்தை தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்தார். உடன் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி மற்றும் விவசாயப் பெருமக்கள் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உடன் கலந்து கொண்டனர்.

---

## 'முத்துத்தீவில் முப்பெரும் விழா!' வளைகுடா நாடான

# பஹ்ரைன் நாட்டில் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

### தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்றுச் சிறப்புரை!

*மனாமா (பஹ்ரைன்), ஜூலை 10 -*

வளைகுடா நாடான பஹ்ரைன் நாட்டில், தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதற்கு, நாற்பது வெற்றிக் கொண்டாட்டம் மற்றும் அயலகத் தமிழர்களுக்கான அடையாள அட்டை வழங்குதல் என முப்பெரும் விழா வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் முகமது ஹுசைன் மாலிம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக நாகை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், தமிழ்நாடு அரசின் டெல்லிக்கான சிறப்பு பிரதிநிதியும் தி.மு.க. விவசாய அணியின் செயலருமான ஏ.கே.எஸ்.விஜயன் கலந்து கொண்டார்.

தமிழ் தாய் வாழ்த்துப் பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கியது. வண்ணத் தமிழில், கலைஞர் அவர்களின் எழுத்து நடையில் குடந்தை ஆரிப் வரவேற்பு உரை நிகழ்த்தி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

துணைத் தலைவர் கருணாநிதி சண்முகம் வாழ்த்துரை வழங்கும் போது தலைவர் கலைஞர் இலக்கியப் படைப்புகளைப் பற்றிப் பேசினார். ஆலோசனைக் குழுத் தலைவர் கபீர் அகமது - தலைவர் கலைஞர் அவர்களின் சாதனைகளைப் பட்டியலிட்டுப் பேசினார்.

ஆலோசனைக்குழு உறுப்பினர் சர்புதீன் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் அரசு கொண்டு வந்த சிறப்பு வாய்ந்த முத்தான திட்டங்களான அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம், 'கனவு இல்லம்' போன்ற அருமையான திட்டங்களை எல்லாம் புதிதாகப் பொறுப்பேற்று உள்ள பிரிட்டன் அரசு பின்பற்ற உள்ளதை எடுத்துக் கூறினார்.

சேகர் ராஜலிங்கம், இந்திய துணைக் கண்டத்தில் எந்த ஒரு மாநில முதல்வரும் சிந்திக்காததைக் கூட செய்து காட்டியவர் கலைஞர். சமத்துவபுரம் என்ற திட்டம், பெரியார் சிந்தித்து இருக்கலாம், அண்ணா பேசி இருக்கலாம் ஆனால் அதற்குச்செயல் வடிவம் கொடுத்து நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் என்றார்.

கலைஞர் அவர்களை ஒரு இயக்கத்தின் அரசியல் தலைவர் என்ற ஒரு கோணத்தில் மட்டும் பார்த்து விட முடியாது. அவரின் இலக்கியம் தமிழர்களின் கலையையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் பேசும், எழுத்துகள் சமூக நீதியையும், சமத்துவத்தையும் பேசிக்கொண்டே இருக்கும் என்றார்.

திராவிட இயக்கப் பேச்சாளர், எழுத்தாளர் மற்றும் ஊடகவியலாளர் வல்லம் பசீர் பேசுகையில், தலைவர் கலைஞர் ஒரு போராளி, அது தான் அவரை இந்தியா முழுமையும் திரும்பி பார்க்க வைத்தது என்றார்.

இணைச் செயலாளர் மன்னை முபாரக் - பெரியார், அண்ணா கண்ட கனவுகளை எல்லாம் தலைவர் கலைஞர் சட்டங்களாக்கி, திட்டங்களாக மாற்றினார். கலைஞர் கண்ட கனவுகளை இந்த திராவிட மாடல் அரசின் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் நனவாக்கிக் கொண்டுள்ளார் என்றார்.

பெருவை பிரபா, சவூதி சிக்கந்தர் பாபு ஆகியோர் முத்தமிழறிஞர் கலைஞருக்குப் புகழாரம் சூட்டினர்.

தலைமை உரை நிகழ்த்திய வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் தலைவர் முகமது ஹுசைன் மாலிம், திராவிட கருத்தியலையும், நாம் வாழும் சமூகத்திற்கு கலைஞர் செய்த சாதனைகளை இன்றைய இளைய தலைமுறை கேட்டறிந்து கொண்டு அதை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு சென்று சேர்க்க வேண்டும் என்றார். விழாப் பேருரை நிகழ்த்திய தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி, முன்னாள் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தி.மு.க. விவசாய அணியின் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன். தலைவர் கலைஞர் அவர்களின் உயரிய பண்புகளைப் பற்றியும், அரசு அலுவலர்கள் பணியில் இருக்கும் போது இறந்து விட்டால், அவர்களின் குடும்பத்தினர்களுக்கு உடனடியாக அரசு பண உதவிகள் செய்ய வேண்டும் என்ற உத்தரவு பிறப்பித்தது முதல், நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்து, நிலமற்ற விவசாயிகளுக்கு நிலங்களை பட்டவுடன் வழங்கியது மட்டும் அல்லாமல் அனைத்துத்தரப்புவிவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை காத்தது வரையிலான, முத்தமிழறிஞர் கலைஞரின் சாதனைகளைப் பட்டியலிட்டார்.

பெரியாரின் இதயத்தில் தைத்த முள்ளாக இருந்த அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற மிகப் பெரிய சமுதாயப் புரட்சியை இந்தியாவில் உருவாக்கியவர் தலைவர் கலைஞர் என்றும். பெண்களுக்கு கல்வி அறிவு மிக முக்கியம் என்பதை உணர்ந்த 10 வது வரை படித்த பெண்களுக்கு திருமண உதவித் திட்டம் என்று மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்தது மட்டும் அல்லாமல். பெண்களுக்கு வேலை வாய்ப்பு, சொத்துரிமை போன்ற எண்ணற்ற திட்டங்களை உருவாக்கியவர் கலைஞர் என்று குறிப்பிட்டார்.

அவர் வழி வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகர் நம் முதல்வர் ஸ்டாலின் அவர்கள், பெண்களுக்கு இலவச பேருந்துப் பயணம், பெண்கள் தங்கும் விடுதிகள், பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என பெண்களுக்கான பல்வேறு திட்டங்களை இந்த அரசின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

'ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்' என்ற திட்டம் விளிம்பு நிலையில் இருந்தவர்களின் வாழ்க்கையை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றியது பற்றி பேசினார்.

தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் தமிழ் நாடு சிறப்புடன் விளங்கி முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து சென்று கொண்டு உள்ளது என்றார்.

சிறப்பு விருந்தினருக்கு வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் நினைவுப் பரிசுகளை சங்கீதா பாபு, மணிவண்ணன் ஆகியோர் வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் பாரதி தமிழ்ச் சங்கத்தின் சார்பில், லட்சுமி நரசிம்மன், இளைய ராஜா மற்றும் முகமது கனி ஆகியோர் கலந்து கொண்டு ஏ.கே.எஸ்.விஜயனுக்குப் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கினார்கள். துணைப் பொறுப்பாளர் சுல்தான் இப்ராஹிம் தொகுத்து வழங்க, மக்கள் தொடர்புச் செயலாளர் சதீஷ் குமார் நன்றி கூறினார்.